# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1839/45 - 2013 දෙසැම්බර් මස 05 වැනි බ්‍රහස්පතින්දා - 2013.12.05

*1839/45 ஆம் இலக்கம் - 2013 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 05 ஆந் திகதி வியாழக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி IV (அ) - மாகாண சபைகள்

## மாகாண சபை அறிவித்தல்கள்

**இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் மேல் மாகாண, மாகாண சபை**

(வீதி அபிவிருத்தி, கால்நடை உற்பத்தி மற்றும் அபிவிருத்தி வீடமைப்பு மற்றும் கட்டுமான, மீன்பிடி மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சு)

(மேல் மாகாண சபையின் உத்தரவுப்படி அச்சிடப்பட்டது)

**மேல் மாகாண மாகாண சபை**

*2013 ஆம் ஆண்டின் 05 ஆம் இலக்க, மேல் மாகாண, மாகாண வீதி அபிவிருத்தி அதிகாரசபை (திருத்தம்) நியதிச் சட்டம்*

*(2013.10.30 ஆந் திகதியன்று வழங்கப்பட்ட ஆளுநரின் அனுமதி)*

மேல் மாகாண, மாகாண சபையில் 2013 ஒற்றோபர் மாதம் 08 ஆந் திகதியன்று நடைபெற்ற கூட்டத்தின்போது 2013 ஆம் ஆண்டின் 05 ஆம் இலக்க, மேல் மாகாண, மாகாண வீதி அபிவிருத்தி அதிகாரசபை (திருத்தம்) நியதிச் சட்டம் அங்கீகரிக்கப்பட்டது என்று நான் சான்றளிக்கின்றேன்.

சுனில் விஜேரத்ன,
தலைவர்,
மேல் மாகாண மாகாண சபை.

***2013 ஆம் ஆண்டின் 05ஆம் இலக்க, மேல் மாகாண, மாகாண வீதி அபிவிருத்தி அதிகாரசபை (திருத்தம்) நியதிச் சட்டம்***

இந் நியதிச்சட்டமானது, 1989 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க மேல் மாகாண, மாகாண வீதி அபிவிருத்தி அதிகாரசபை நியதிச் சட்டத்தினை திருத்துவதற்காகும்.

இது இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் மேல் மாகாண, மாகாண சபையினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகும்.

*சுருக்கப்பெயரும் நடைமுறைக்கு வரும் திகதியும்.*

01. இந்நியதிச்சட்டமானது 2012 ஆம் ஆண்டின் 05 ஆம் இலக்க, மேல் மாகாண, மாகாண வீதி அபிவிருத்தி அதிகார சபை (திருத்தம்) நியதிச்சட்டம் என எடுத்துக் காட்டப்படலாம் என்பதுடன் ஆளுநர் அங்கீகரிக்கின்றவாறான அத்தகைய திகதியன்று நடைமுறைக்கு வருதலும் வேண்டும்.

*முதன்மை நியதிச்சட்டத்தின் பாயிரத்தினைத் திருத்துதல்.*

02. (இதனகத்துப்பின்னர் முதன்மை நியதிச்சட்டம் எனக் குறிப்பீடு செய்யப்படும்) 1989 ஆம் ஆண்டின் 04 ஆம் இலக்க, மேல் மாகாண, மாகாண வீதி அபிவிருத்தி அதிகாரசபை நியதிச்சட்டத்தின் பாயிரத்தில் 'ஒரு சட்டம்' என குறிப்பீடு செய்யப்பட்ட கடைசிச்சொல் நியதிச்சட்டத்தில் 'ஒரு நியதிச்சட்டம்' என திருத்தப்பட்டுள்ளது.

*இவ் அதிவிசேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

பிரதான நியதிச் சட்டத்திலுள்ள 4(ஆ) என்னும் உட் பிரிவினைத் திருத்துதல்.

03. முதன்மை நியதிச்சட்டத்தின் 4(ஆ) என்னும் உட்பிரிவானது சொல்லப்பட்ட உட்பிரிவினை நீக்குவதன் மூலமும் பின்வரும் உட்பிரிவினை உட்புகுத்துவதன் மூலமும் இத்தால் திருத்தப்படுகின்றது.

04(ஆ) இந்நியதிச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அமைய, மாகாண அமைச்சரானவர் மாகாண அதிகாரசபையின் கூட்டம் அத்துடன்/அல்லது கூட்டங்கள் தொடர்பான நடவடிக்கை முறைகளுக்காக விதிகளை ஆக்கலாம்.

முதன்மை நியதிச் சட்டத்தின் 7ம் பிரிவினைப் பதிலீடு செய்தல்.

04. 7(1) முதன்மை நியதிச்சட்டத்தின்7 ஆம் பிரிவானது சொல்லப்பட்ட பிரிவினை நீக்குவதன் மூலமும் பின்வரும் பிரிவினை உட்புகுத்துவதன் மூலமும் இத்தால் திருத்தப்படுகின்றது. ஏதேனும் அபிவிருத்திப்பிரதேசத்தினுள் 7(1) (5) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகளுக்கு அமைய:-

(அ) அத்தகைய பிரதேசங்களில் வீதி அபிவிருத்தித் திட்ட வரைபடத்தினை தயார்செய்தலும் வீதி அபிவிருத்தியும்.

(ஆ) அத்தகைய பிரதேசங்களில் ஒருங்கிணைக்கப்பட்ட வீதி, அபிவிருத்தி திட்ட வரைபடத்தினை தயார் செய்தலும், வீதி அபிவிருத்தி தொடர்புபட்ட நிகழ்ச்சித் திட்டங்களை மற்றும் சேவைகளை அமுல்படுத்துதலும்.

(இ) மூலதன அபிவிருத்தித் திட்டங்கள் மற்றும் அத்தகைய திட்டங்களை அமுல்படுத்துதல் உள்ளடங்கலாக வீதி அபிவிருத்தித் திட்டங்களை அமைத்துருவாக்குதல்.

(ஈ) ஏதேனும் வீதி அபிவிருத்தி கருத்திட்டத்தை நிறைவேற்றும் நோக்கத்திற்கு அவசியமாக இருக்கக் கூடியதான எல்லா ஒப்பந்தங்களைச் செய்து கொள்ளுதலும் உடன்படிக்கைகளை நிறைவேற்றுதலும்,

(உ) ஏதேனும் வீதி அபிவிருத்தி கருத்திட்டத்தை நிறைவேற்றும் நோக்கத்திற்காக அவசியமாக இருக்கக்கூடியதான கூட்டுமுயற்சி அத்தகைய எல்லா ஒப்பந்தங்களைச் செய்து கொள்ளுதலும் உடன்படிக்கைகளை நிறைவேற்றுதலும்,

(ஊ) அத்தகைய கருத்திட்டம் அல்லது திட்டத்தினைப் பூர்த்தி செய்வதற்கு தவறுகின்ற எவரேனும் ஆளின் அல்லது நிறுவனத்தின் தவறுகையிலுள்ள ஏதேனும் வீதி அபிவிருத்தி கருத்திட்டத்தின் அல்லது திட்டத்தினை பூர்த்தி செய்தலினை பொறுப்பேற்றலும்.

(எ) ஏதேனும் அசையும் அல்லது அசையா ஆதனத்தை கொள்ளுதலும், கொள்வனவு செய்தலும், அல்லது வைத்திருத்தலும் அல்லது கொள்ளப்பட்ட கொள்வனவு செய்யப்பட்ட அல்லது அதனால் வைத்திருக்கப்பட்ட அத்தகைய அசையும் அல்லது அசையா ஆதனத்தை கையுதிர்த்தல் அல்லது குத்தகைக்கு கொடுத்தல் கொள்வனவு செய்தவற்றை குத்தகைக்கு கொடுத்தல்.

(ஏ) ஏதேனும் நிறுவனத்தின் வேண்டுதலின் பேரில், அத்தகைய நிறுவனத்தின் பொருட்டு வீதி அபிவிருத்தி மற்றும் திட்ட வரைபடத் திட்டங்களைத் தயார் செய்தலும் அத்துடன் அத்தகைய கருத்திட்டங்கள் அல்லது திட்டங்களின் நிறைவேற்றுதலில் ஒருங்கிணைத்தலும் உதவுதலும்.

(ஐ) ஏதேனும் நிறுவனத்தின் அல்லது ஆளின் நன்மைக்காக வீதி திட்டமிடல் சேவையினை வழங்குதல்.

(ஒ) மாகாண அதிகார சபையினால் வழங்கப்படும் ஏதேனும் சேவைகளுக்காக விலை அல்லது கட்டணங்களை அறவிடுதல்.

(ஓ) காசாக அத்துடன்/அல்லது வேறுவகையாக கொடை, மானியக்கொடை, நன்கொடை அத்துடன்/அல்லது மானியம் என்பவற்றை ஏற்றுக்கொள்ளுதல்.

(ஔ) வீதி ஒதுக்கிடம் ஒன்றைப் பயன்படுத்துவதற்காக திறமைவாய்ந்த சேவை வழங்குனர்களில் எவரேனும் அனுமதித்தல், மற்றும் அத்தகைய வேலைக்கான வாடகையை விதித்தல் அத்துடன் அத்தகைய ஏதேனும் வேலைகளுக்கு அவசியமாக இருக்கக்கூடியவாறான ஏதேனும் உடன்படிக்கைகளை செய்துகொள்ளுதல்.

(ஃ) அறிவிப்புகள் மற்றும் பதாதைகள் என்பவற்றை வெளிக்காட்டி வைப்பதற்கு எவரேனும் ஆள் அல்லது நிறுவனத்தை அனுமதித்தல் மற்றும் பலவகைகள் மற்றும் வீதி அடையாளங்கள் மற்றும் பலகைகள் நிறுவுதல், மற்றும் வீதி ஒதுக்கிடம் ஒன்றில் ஏதேனும் வியாபாரத்திற்கான தற்காலிக கட்டமைப்பொன்றை நிறுவுதல் அத்துடன் இந்த நோக்கத்திற்காக அத்தகைய ஆள் அல்லது நிறுவனத்திடமிருந்து வாடகையை அறவிடுதல் அத்துடன் அவசியமாக இருக்கக்கூடியதான ஏதேனும் உடன்படிக்கைகளைச் செய்து கொள்ளல்.

(கா) இந்நியதிச் சட்டத்தின் கீழ் அதனது தத்துவங்களை, கடமைகளை, பணிகளை பிரயோகித்தல், புரிதல், அத்துடன் நிறைவேற்றுதல் என்பவற்றின் மீது இடைநேர்விளைவான அல்லது விளைவாந்தன்மையான அத்தகைய எல்லாக் கருமங்களையும் அல்லது செயல்களையும் செய்தல்.

7(2) (அ) ஏதேனும் நிறுனத்தின் வேண்டுதலின் பேரில் வீதி அபிவிருத்திக் கருத்திட்டங்கள் அத்துடன்/ அல்லது வேறு நிர்மானஙகளுக்கான கருத்திட்டங்கள் அல்லது அபிவிருத்திப் பிரதேசத்தினுள் அல்லதுத அதற்கு வெளியேயுள்ள திட்டங்கள், என்பவற்றை தயார் செய்தலும், அத்தகைய நிறுவனத்தின் சார்பில் அத்துடன்/ அல்லது தேவைப்படுகின்றவாறான பொறியியல் நிர்மானிப்பு சேவைகளை வழங்குதலும் அத்துடன்/அல்லது அத்தகைய கருத்திட்டங்கள் அல்லது திட்டங்களை அமுல்படுத்துதலும்,

(ஆ) ஏதேனும் அசையும் அல்லது அசையா ஆதனத்தைக் கொள்ளுதலும், கொள்வனவு செய்தலும் அத்துடன் வைத்திருத்தலும் மேலே பந்தி (அ) வில் குறிப்பிடப்பட்டவாறு ஏதேனும் செயல் அல்லது கருமங்களுக்கு அவசியமாக இருக்கக்கூடியவாறான கொள்ளப்பட்ட அல்லது கொள்வனவு செய்யப்பட்ட ஏதேனும் அசையும் அல்லது அசையா ஆதனத்தை கையுதிர்த்தல் அல்லது குத்தகைக்கு கொடுத்தல்.

(இ) மேலே (அ) என்னும் பந்தியில் குறிப்பிடப்பட்டவாறு ஏதேனும் செயல் அல்லது கருமத்தை நிறைவேற்றும் நோக்கத்திற்கு அவசியமாக இருக்கக்கூடியவாறான ஏதேனும் ஒப்பந்தங்களை செய்து கொள்ளுதலும் அல்லது உடன்படிக்கைகளை நிறைவேற்றுதலும்,

(ஈ) மேலே (அ) என்னும் பந்தியில் குறிப்பிடப்பட்டவாறு ஏதேனும் செயல் அல்லது கருமத்தை நிறைவேற்றும் நோக்கத்திற்கு அவசியமாக இருக்கக்கூடியவாறான கூட்டுமுயற்சி, அத்தகைய எல்லா உடன்படிக்கைகளை செய்து கொள்ளுதலும், புரிதலும் அல்லது நிறைவேற்றுதலும்.

(உ) ஏதேனும் கிளை அலுவலகங்களைத் தாபித்தலும், ஒப்பந்த பணியாட்டொகுதியினர், ஊழியர்கள், என்போரை நியமித்தலும், சேவைகளின் நியதிகளின்படியும் நிபந்தனைகளின் படியும் தீர்மானித்து பதவியிலிருந்து நீக்குதலும், கூலிகள் அல்லது சம்பள மற்றும் வேறு ஊதியத்தினை நிறுவுதல் அத்துடன் மேலே (அ) என்னும் பந்தியில் குறிப்பிட்டவாறு ஏதேனும் செயல் அல்லது கருமத்தை நிறைவேற்றும் நோக்கத்திற்கு அவசியமாக இருக்கக்கூடியவாறான ஒழுக்காற்றுக் கட்டுப்பாடுகளைப் பிரயோகித்தல் போன்ற அனைத்தும், அதிகார சபையின் தத்துவங்களும் கடமைகளும் அத்துடன் பணிகளுமாக இருத்தல் வேண்டும் ;

7 (3) (அ) அசையா ஆதனம் கையுதிர்த்தல் பந்திகள் 7 (1) (எ) மற்றும் 7 (2) (அ) என்பவற்றில் குறிப்பிட்டவாறு மாகாண சபையின் அமைச்சர்கள் சபை அங்கீகாரத்திற்கமைய நிறைவேற்றப்படுதல் வேண்டும் ;

(ஆ) அசையாத ஆதனம் குத்தகைக்கு கொடுக்கப்பட்டிருக்கின்ற போது, வீதி ஒதுக்கிடங்கள் பந்திகள் 7 (1) (.....) மற்றும் 7 (2) (ஆ) என்பவற்றில் குறிப்பிடப்பட்டவாறு சொல்லப்பட்ட குத்தகையில் உள்ளடக்கப்படலாகாது.

7 (4) மாகாண அமைச்சரின் அங்கீகாரத்தின் முன்னரான கூட்டு முயற்சி உடன்படிக்கைகளைச் செய்து கொள்கின்ற பொழுது பந்திகள் 7 (1) (உ) மற்றும் 7 (1) (இ) இல் குறித்துரைக்கப்பட்டுள்ளவாறு இந்நோக்கங்களுக்காகப் பெறப்பட்டிருத்தல் வேண்டும்.

7 (5) விடயத்திற்கேற்றவாறு எதனுடைய உரிமைகள் அக்கரைகள் அல்லது பணிகள் முன்மொழியப்பட்ட வேலைகளினால் பாதிக்கப்படக் கூடுமோ, அதனுடைய ஏதேனும் நிறுவனம் அல்லது ஒழுங்கமைப்பின் ஆலோசனையுடன் அவ்வாறு செய்வதற்கு ஏதேனும் அபிவிருத்திப் பிரதேசத்தினுள் வீதி திட்டமிடல் அல்லது வீதி அபிவிருத்தி தொடர்பாக ஏதேனும் அபிவிருத்தி வேலை நிகழ்ச்சித் திட்டத்தை வகுத்தமைக்கும் போது அல்லது அமுல்படுத்தும்போது (1) ஆம் உட்பிரிவின் கீழான அதனது தத்துவங்கள், கடமைகள் மற்றும் பணிகளை பிரயோகித்தல் புரிதல் மற்றும் நிறைவேற்றுதல் மாகாண அதிகாரசபையின் கடமையாதல் வேண்டும்.

7 (6) விடயத்திற்கேற்றவாறு, சொல்லப்பட்ட அபிவிருத்தி வேலை நிகழ்ச்சித் திட்டம் தொடர்பாக, மாகாண அதிகாரசபையின் கூட்டம் அல்லது கூட்டங்களில் சமுகமளிப்பதற்கும் பங்களிப்பதற்கும் நகர முதல்வர் அல்லது தவிசாளரினால் பெயர்குறித்து நியமிக்கப்பட்ட அத்தகைய உள்ளூர் அதிகாரசபையின் நகர முதல்வர் அல்லது தவிசாளர் அத்துடன் அவ் உள்ளூர் அதிகாரசபையின் அலுவலரைக் கோருவதற்கு, ஏதேனும் உள்ளூர் அதிகாரசபை பிரதேசம், அபிவிருத்திப் பிரதேசத்தினுள் இருப்பின், அல்லது அதற்கு வெளியே இருப்பின், ஏதேனும் அபிவிருத்திப் பிரதேசத்தினுள் வீதித் திட்டமிடல் அல்லது வீதி அபிவிருத்தி தொடர்பாக ஏதேனும் அபிவிருத்தி வேலை நிகழ்ச்சித் திட்டங்களை அமைத்துருவாக்கும் போது, (1) ஆம் உட்பிரிவின் கீழ் மாகாண அதிகாரசபையானது தனது தத்துவங்கள், கடமைகள் மற்றும் பணிகளை பிரயோகித்தல், புரிதல் மற்றும் நிறைவேற்றுதல் அதனது கடமையாதல் வேண்டும்.

*7 ஆம் பிரிவின் கீழ் விதிகளை ஆக்குதல்.*

05. பந்தி (ஔ) (க) வின் கீழ் 7 (1) என்னும் உட்பிரிவில், மாகாண அமைச்சரானவர் தத்துவங்களை நிறைவேற்றுவது தொடர்பில் விதிகளை ஆக்கலாம்.

*முதன்மை நியதிச் சட்டத் தின் 13 ஆம் பிரிவினைத் பதிலீடு செய் தல்.*

06. முதன்மை நியதிச் சட்டத்தின் 13 ஆவது பிரிவு நீக்கப்பட்டு, அதற்காக கீழ்வரும் பிரிவுகள் உட்புகுத்தப்பட்டு, அந்த பிரிவு இதன் மூலம் திருத்தப்படுகிறது.

13 (1), (2) உப பிரிவுகளின் ஏற்பாடுகளுக்கமைவாக மற்றும் மாகாண சபை அமைச்சரின் எழுத்து மூலமான விருப்பத்துடன், அதிகார சபையால் இந்த சட்டவாக்கத்தின் நோக்கங்களை நிறைவேற்றும் போது, அவசியமான சில பொறுப்புக்களுக்காக தேவைப்படும் பணம் கீழ்வருமாறு கடன் பெறுதல் அல்லது பெற்றுக்கொள்வதன் மூலம் மேற்கொள்ளப்படலாம்.

(அ) தற்காலிக அதிகப்பற்று அல்லது வேறெவ்வகையிலும் ;

(ஆ) கடன் பத்திரம் விற்பனை மூரம் கடன் பத்திரம், வாக்குறுதிப்பத்திரம் விற்பனை சான்றிதழ்.

(2) 1 ஆவது உப பிரிவின் கீழ் அதிகார சபையால் பெற்றுக்கொண்டிருக்கும் ஏதும் கடன் தொகை அல்லது நிதியை செலுத்தி முடிக்கப்படாத முழுத்தொகையையும் மாகாண அமைச்சுகளினால் நிதிக்கு பொறுப்பாக இருக்கும் .

மாகாண அமைச்சரனால் முடிவு செய்யப்படும் தொகை எக்காலத்திலும் அத்தொகையை விஞ்சுதல் ஆகாது.

*முதன்மை நியதிச் சட்டத் தில் 15 என்னும் பிரிவினைத் திருத்துதல்.*

07. முதன்மை நியதிச்சட்டத்தின் 15 ஆம் பிரிவானது சொல்லப்பட்ட பிரிவினை நீக்குவதன் மூலமும் பின்வரும் பிரிவினை உட்புகுத்துவதன் மூலமும் இத்தால் திருத்தப்படுகின்றது.

15. மாகாண அமைச்சரானவர் மாகாண அதிகாரசபையின் அலுவல்களை முகாமை செய்வது தொடர்பிலும் அதிகாரமளிக்கப்படுகின்ற அல்லது தேவைப்படுத்தப்படுகின்ற எந்தக் கருமங்களுக்கு இந் நியதிச் சட்டத்திலான விதிகள் ஆக்கப்பட வேண்டும் என அந்த கருமங்கள் எல்லாவற்றினதும் அல்லது ஏதேனும் ஒன்று தொடர்பிலும் விதிகளை ஆக்கலாம்.

08. முதன்மை நியதிச் சட்டத்தின் பொருள்கோடல் பிரிவில் "தேசிய பெருந்தெருக்களின்" பொருள் கோடலை உடனருத்து, சொல்லப்பட்ட பொருள்கோடல் பிரிவு பின்வரும் பொருள் கோடலை உட்புகுத்துவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

"நிறுவனம் " என்பது, அமைச்சு, திணைக்களம் கூட்டுத்தாபனம், அதிகாரசபை, சபை அரசாங்கத்திலுள்ள மாகாண சபை, மகாாண அமைச்சு, திணைக்களம், கூட்டுத்தாபனம் அல்லது உள்ளூர் அரசாங்க நிறுவனம் எனப்பொருள்படும்.

"நபர்" என்பது, சட்ட நபர் ஒருவர், பங்குடமை அல்லது இயற்கை நபர் எனப்பொருள்படும்.

"பயன்பாட்டு சேவைகளின் வழங்குநர்" என்பது நீர், மின்சாரம் மற்றும் வேறு தொடர்பாடல் சேவைகள்.

12-914

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.